யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 26 றஜப் 27 இதழ் 57

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-4-1986

## ● தம்பிலுவில் நேரடி மோதல்: பலத்த உயிர்ச் சேதம்?

[அக்கறைப்பற்று]

அக்கறைப்பற்று மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் நேற்று நண்பகல் நேரடிமோதல் இடம்பெற்றது.

இரு பகுதியினருக்குமிடையே ஏற்பட்ட இம் மோதலில் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [மா]

## ரூ. 24 ஆயிரம் கொள்ளை

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு விற்பனவு எரிபொருள் நிலையத்திலிருந்து ஆயுத முனையில் 24 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த எரிபொருள் விற்பனவு நிலையத்தில் அதன் முகாமையாளர் எம். தர்மதாஸ உட்பட ஐந்துபேர் கடமையிலிருந்தனர் சாரமும் சேட்டும் அணிந்த இருவர் திடீரென நிலையத்திற்குள் புகுந்து கைத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திவிட்டுக் கொள்ளையடித்துச் சென்றனர்.

சைக்கிளில் சென்ற இருநபர்களும் சிங்களத்தில் பேசியே கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது [மா]

# ஆயுதமனிதர் மத்தியில் அம்பாறைத் தமிழர்கள்!

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் முஸ்லிம் மக்களிடமிருந்து பெறப்பட்ட துப்பாக்கிகள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் முன்னர் விவசாய மற்றும் பாதுகாப்புக் கருதி இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இம்மக்களிடமிருந்து அரசு துப்பாக்கிகளை மீளப்பெற்றதைத்தொடர்ந்து அமைக்கப்பட்ட ஊர்காவல்படையினர் ஆயுதபாணிகளாகத் தொடர்ந்தும் இருந்துவருகின்றனர்.

நிராயுத பாணிகளான தமிழ் கிராம வாசிகள் பெரிதும் சங்கடத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை அயலிலுள்ள தமிழ்க்கிராமங்கள் வேண்டாத தொல்லைகளுக்குள்ளாகி வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இத்தமிழ்க் கிராமங்களிலுள்ள வீடுகளுக்குள் துப்பாக்கி மனிதர்கள் நள்ளிரவுகளில் அத்துமீறிப் புகுந்து வீடுகளில் இருப்பவர்களை பயமுறுத்திப் பொருள்களைக் கொள்ளையடிப்பதும் பெண்களிடம் சேஷ்டை விடுவதுமான சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றனவாம்.

தீவிரவாதிகள் என்ற போர்வையிலும் இத்துப்பாக்கி மனிதர்கள், தனியாகவும் வீடுகளுக்குச் சென்று பயமுறுத்திக் கொள்ளையடிக்கிறார்களாம்.

இதனால் நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் பெரிதும் இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனர். (மா)

## காட்டில்கஞ்சா பயிர்தீக்கிரை

(புலோலி)

பளைப் பகுதியில் காட்டில் விளைவிக்கப்பட்ட கஞ்சாச் செடிகள் தீவிரவாத இளைஞர் குழுவினால் கைப்பற்றப்பட்டு பஸ்நிலையத்தில் வைத்து பகிரங்கமாகத் தீக்கிரையாக்கப்பட்டன.

## அகதிகள் நிதியை பகிர்ந்தளிக்க ஏற்பாடு

(சாவகச்சேரி)

நோர்வே மக்கள் நிவாரணச் சங்கத்தினால், மறவன்புலவு, தெற்பேலியில்குடியமர்த்தப்பட்டிருக்கும், அகதிக

[5ம் பக்கம் பார்க்க]

## புத்தாண்டை முன்னிட்டு வவனியாவரை ரயில்சேவை

(வவனியா)

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து வவனியாவரை வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் ரயில் சேவை நடாத்தப்படவுள்ளது

ரயில்மூலம் வவனியாவரை வந்து சேரும் யாழ் குடாநாட்டு மக்கள் தத்தமது

[5ம் பக்கம் பார்க்க]

## இலங்கைத் தமிழர் இன்னல்: லோக்சபாவில் கவலை

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை ஆயுதப் படையினர் நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்து லோக்சபாவில் அ. அ. தி. மு. க. உறுப்பினரும், இந்திராக் காங்கிரஸ் உறுப்பினரும் கவலை தெரிவித்தனர்.

அனைத்திந்திய அண்ணா தி. மு. க. உறுப்பினர் திரு டி. குழந்தைவேலுவும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. டி. ஆர் குமார மங்களமுமே இவ்விஷயம் பற்றி நேற்று லோக்சபாவில் கவலை தெரிவித்தார்கள்.

இலங்கையின் வடபகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை இராணுவத் தளபதியை இலங்கை அரசு கேட்டுக்கொண்டிருப்பதாகவும் இவர்கள் லோக்சபாவில் தெரிவித்தனர்.

இந்த விஷயத்தில் இந்திய அரசு என்ன செய்ய உத்தேசித்துள்ளது என்று வெளியுறவு அமைச்சர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் இரு கட்சிகளின் உறுப்பினர்களும் கேள்வி எழுப்பினர். [து]

## கூ. மொ. வி. களஞ்சியத்தில் மீண்டும் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ் புகையிரத நிலையத்தில்உள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் களஞ்சியத்திலிருந்து நேற்று உணவுப் பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது

முன்னரும் இக் களஞ்சியத்தில் கொள்ளைகள் நடந்தது தெரிந்ததே. (மா)

## அடகுவைத்தோர் மறியல்போராட்டம்: இலங்கை வங்கிக்கிளைக்கு நாளை விஸ்தரிப்பு!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் வடபகுதி கிளைகள் முன்னிலையில் தாங்கள் அடகுவைத்த நகைகளை வழங்குமாறு கோரி மறியல் போராட்டம் நடத்திவரும் அடகுவைத்தோர்சங்கத்தினர் இலங்கை வங்கியின் வடபகுதி கிளை அலுவலகங்கள் முன்னிலையிலும் நாளைபுதன்கிழமை அடையாள மறியல் போராட்டம் நடத்தவுள்ளனர்.

அடகுவைத்த நகைகள் வழங்குவதைத் தாமதப் படுத்துவதைக் கண்டித்தேமேற்குறிப்பிட்ட போராட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அடகுவைத்தோர் சங்கம் தெரிவித்துள்ளது

மேலும் சகல மக்கள்வங்கிக் கிளைகள் முன்பாக மறியல் போராட்டத்தைத் தொடருவதெனவும் நாளை புதன் கிழமைநடைபெறும் இலங்கை வங்கி முன்பான மறியல் போராட்டத்தில் சகல வாடிக்கையாளரும் காலை 7 00 மணிக்கே வந்து கலந்து கொள்ளும் படியும் சகல வாடிக்கையாளரையும் அடகுவைத்தோர் சங்கம் கேட்டுள்ளது [மா]

## பூஸாமுகாமுக்கு கொண்டு சென்றனர்

(வவனியா)

மாங்குளம் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான பல தமிழ் இளைஞர்கள்கடந்த வாரம் பூஸாமுகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

## "பாதுகாப்பான இடமென்று இங்கு எதுவுமில்லை"

### ஜனாதிபதிக்கு வடக்கிலிருந்து மகஜர்

[யாழ்ப்பாணம்]

'ஒவ்வொரு மூன்று மைல். ஐந்து மைல் தூர எல்லைக்குள் ஆயுதப்படையினரின் முகாம்கள் இருக்கின்ற சூழலில் இங்கு பாதுகாப்பான இடம் என்று சொல்வதற்கு எதுவுமில்லை.''

ஒரு முற்றுமுழுதான ஆயுதப்படைகளின் தாக்குதல் நிகழும் தருணத்தில் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரவேண்டுமெனத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் விடுத்துள்ள எச்சரிக்கை பற்றி புன்னாலைக்கட்டுவன் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

''தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் எச்சரிக்கை உண்மையாக இருக்கும்பட்சத்தில் பிரஜைகள் என்ற வகையில் பாதுகாப்பான இடங்களுக்கு எம்மை அனுப்பவும் மற்றும் வசதிகளைச் செய்துதரவும் அவரே கடமைப்பட்டவர்

''போராளிகளுக்கு எதிரான தாக்குதலின்போதே பொது மக்கள் இறக்க நேரிகிறது என அரச வானொலி, தொலைக் காட்சிச் சேவைகளில் செய்தி வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மைகள் இவற்றுக்குப் புறம்பானவையாகவுள்ளன. அப்பாவிமக்கள் கொலை செய்யப்படும் நிகழ்வுகள் இராணுவ அத்துமீறல்களாலேயே சம்பவித்துள்ளன'' என மேற்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஷ]

வடக்கு, கிழக்கு, மலையக

## இந்துஸ்தாபன பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்களில் பூசை ஆராதனைகள் நடைபெறுவதற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் குறித்து, இந்து ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியது.

ஜனாதிபதியின் மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது பந்தோபஸ்து அமைச்சர் உட்படச் சில அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்

இந்து ஸ்தாபனங்களின் ஒன்றியத் தலைவர் திரு. யோசேந்திரா துரைசுவாமி தலைமையில் சென்ற இத் தூதுக்குழுவில் இந்து ஸ்தாபனங்களைச் சேர்ந்த 14 பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தனர்.

ஆயுதப்படையினரின் நட

[5ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

செட்டிய குறிச்சி பண்டத்தரிப்பில் சகல வசதிகளுடன் கூடிய 3 பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு; சு. சத்தியசீலன், செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பு. [C1628]

தெல்லிப்பழை புகையிரத நிலைய வீதியில் 2½ பரப்பு காணியுடன் நல்ல வசதியுள்ள வீடும்வீட்டுத் தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், ஆர். சிவானந்தன் K K சணேந்திரன் அன் கொம்பனி (சாட்டட் எக்கவுண்டன்) 68, கன்னாதிட்டி ரோட் யாழ்ப்பாணம். C 1641

நல்ல நிலையிலுள்ள New மொடல் Fisher டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ. ஜெகதீசன் 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது வீரமாகாளி அம்மன் அருகிலுள்ள சந்திரன் மோட்டார் காரச் C 1633

இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரிகளுக்கு மிக அண்மையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. இக்காணி வாங்குபவர்களுக்கு கடன்வசதிசெய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்: ஹரிஹரன் என்ரபிறைஸ், [பரமேஸ்வராச்சந்தி],337,பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C1645)

### தேவை

வயோதிபர் ஒருவரைக் கவனிப்பதில் குடும்பத்தினருக்கு உதவியாக இருப்பதற்கு உடனடியாக ஒருவர் தேவை. இடம்: சண்டிலிப்பாய். ஏனைய விபரங்கள் நேரில் பேசப்படும். விளம்பரதாரர், Dyn Ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். A 556

லிகிதர் தேவை G C E. (O/L) கல்வித்தகைமையுடையோர் (இருபாலாரும்) 15-04-86 அன்று காலை 9 மணிக்கு நேரில் வரவும்: றியல்ஸ் குரூப்பின், மானிப்பாய். C 1637

### பயிற்சி

Computer Programming Basic and Cobal ரெவிவிஷன், ரேடியோ, வீடியோ, டெக் ரெக்னோலஜி, எலக்ரிக்கல் வயறிங், வைண்டிங் வகுப்புக்கள் கூடிய நேரசெய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம்: 12-4-86 காலை 9-30 விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி ரோட், (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம். C 1643

## கால்நடை சினைப்படுத்தும் நிலையம்

[சுண்டுக்குளி]

புங்குடுதீவுப் பகுதியில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினர் புங்குடுதீவு கமநல சேவை நிலையத்தில் கால்நடைகளை செயற்கை முறையில் சினைப்படுத்தும் நிலையம் ஒன்றினைத் திறந்து வைத்துள்ளனர்.

Aum

## 2-வது பிறந்தநாள் வாழ்த்து

8- 4- 86

சு. சதீஸ்வரசர்மா

மானிப்பாய், வேலக்கைப் பிள்ளையார் கோவில் சுப்பிரமணியக்குருக்கள் நிரஞ்சனா தேவிதம்பதிகளின்செல்வப்புதல்வன் சதீஸ்வர சர்மா தனது மூதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணமார், கிருபா, ஸ்ரீ, சபா ஆகியோர் வேற்கையான் துணைகொண்டு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (A555)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

8- 4- 86



செல்வன் ஞா. பிரசாந்

8ம் வாய்க்கால் உருத்திரபுரத்தைச் சேர்ந்த திரு பா. ஞானச்சந்திரன்- சாந்தினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் பிரசாந் தனது 1-வது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். பிரசாந்தை அன்பு அப்பா, அம்மா, மற்றும் கட்டுவன், உருத்திரபுரம், குரும்பசிட்டி, அளவெட்டி, மட்டக்களப்பு, திருக்கோவிலிலுள்ள உறவினர், நண்பர்களும், வெளிநாட்டிலுள்ள உறவினர்களும் இறையருள் பெற்று வளமுடன் வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர். (C 1236)

## காங்கேசனில் கடற்படை பாதுகாப்புப் பிரிவு

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்புப் படையினரின் விசேட பாதுகாப்புப் பிரிவு அமைக்கப்பட்டதால் தொழிலாளர் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர் காலை 8-மணி முதல் பிற்பகல் 4- மணிவரை மட்டுமே வேலை செய்யலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால் ஏற்றுமதி இறக்குமதி வேலைகட்குச் செல்பவர்களும் அங்கு நிரந்தரமாகத் தொழில் செய்வோர்களும் பீதியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

புத்தளம் மாவட்டத்திலுள்ள முந்தல் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் இ செல்வநாயகம் கடந்த மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பதவி ஏற்றுள்ளார்.

## ஹோமியோபதி வைத்தியர்கள் கூட்டம்

(மானிப்பாய்)

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரின் 27- வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

அன்றைய தினம் டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 231 வது பிறந்தநாள் ஞாபகார்த்த விழாவும் கொண்டாடப்படவிருக்கிறது,

டாக்டர். அ கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் ஹோமியோபதி டாக்டர்கள் பலர் உரை நிகழ்த்தவிருக்கின்றார்கள்.

அடுத்த வருடத்துக்கான சங்க உத்தியோகத்தர் நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும் நடைபெறவிருக்கிறது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனமின்றி மரணித்த திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த வீரசிங்கம் ஜெயராஜசிங்கத்தின் மரணச்சொத்துச் சம்பந்தப்பட்ட விடயத்தில்

- மரணித்தவர்.

வீரசிங்கம் ஜெயராஜசிங்கம் கைம்பெண் கிருஷ்ணாழ், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

- மனுதார்.

இல: தத்துவம்/3900

எதிராக

1 ஜெயராஜசிங்கம் மகள் மதுதா,
2. ஜெயராஜசிங்கம் மகள் அமுதா,
3. ஜெயராஜசிங்கம் அரவிந்தன் எல்லோரும் பராயமற்றவர்கள். இவர்களின் பாதுகாவலர்,
4. முருகேசுசின்னத்துரை சண்முகராசா, எல்லோரும் திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

- எதிர்வாதிகள்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணித்தவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கத்தையுடைய தத்துவ வழக்கை இந்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதிக் கட்டளையை ஏன் பூரணப்படுத்தப்படலாகாது என்பதற்கு தகுந்த காரணம் இருப்பின் இந்நீதிமன்றில் 1986ம் ஆண்டு சித்திரை மாதம் 25ந் திகதி காலை 9-00 மணிக்கு தோன்றி காண்பிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம்திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி, பதிவாளர்.
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
அ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
C 1551

## கல்விப் பணிப்பாளருக்கு பாராட்டு

(உடுவில்)

''யாழ்ப்பாணமக்களின்அழிக்கமுடியாத சொத்தாகிய கல்வியை நல்லமுறையில் பாதுகாக்கும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாரியபொறுப்பை சரிவரச் செய்து முடிப்பதுஅதிபர் ஆசிரியர் பெற்றோர் மாணவர் ஆகிய உங்களின் ஒத்துழைப்பில்தான் தங்கியுள்ளது.''

யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

நவாலி மகாவித்தியாலய அபிவிருத்திச்சங்கமும் பழைய மாணவர்களும் பாடசாலை நிர்வாகமும் ஒருங்கிணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்தனர்.

நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு வித்தியாலய அதிபர் செ. கதிர்காமத்தம்பி தலைமை வகித்தார்.

ஈழநாடு நிர்வாக ஆசிரியர் திரு.என். சபாரட்ணம் தமது பாராட்டுரையில் கிராமப் புறத்தவர்களிடமும், கிராமப் திண்ணைப்பள்ளிகளில் படித்தவர்களிடமும் தான் உண்மையான ஒழுக்கக்கல்வி நிலைக்குமென்பதற்கு திரு. சுந்தரலிங்கம் உதாரணமாக விளங்குகிறார் என்றும் சண்டை எனக் கூறி மாணவர்கள் பாடசாலைக்கு வரத்தவறக் கூடாது என்றும் கூறினார்.

நவாலிமகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் பழையமாணவர் சங்கம் கல்விப்பணிப்பாளருக்குபாராட்டுப்பத்திரம் வழங்கினர் அபிவிருத்தி சங்கச் செயலாளர் தி. அ. சதாசிவம் நன்றி கூறினார்.

## செயற்கைக்கால் செய்முறை பயிற்சி

[யாழ்ப்பாணம்]

கால் ஊனமுற்றோருக்கு செயற்கைகால் வழங்கவும் அதற்கான செயல்முறைகளைப் பயிற்றுவிக்கவும் செயற்கைக் கால் செய்யும் தொழில் நிலையம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் உருவாக்கவும் ஊற்று நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இச்செய்முறைப் பயிற்சி பெற்று இத்திட்டத்தில் வேலை செய்யவிரும்புவோர், உடனே பெயர், விலாசம், கல்வித் தகைமை ஆகிய விபரங்களுடன் செயலாளர், ஊற்று நிறுவனம், மாரிஅம்மன்ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளும் படி கோரப்பட்டுள்ளனர்.

## அறிவித்தல்

வட இலங்கை சுதேச வைத்திய சங்கக் கூட்டம் 09-04-86 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும், அங்கத்தவர்கள், மாணவர் பிரதிநிதிகள் தவறாது சமுகம் தரவும். இக்கூட்டத்தின் தீர்மானப்படியே பரீட்சை நடைபெறும்.

Dr வ. மாசில்லாமணி,
செயலாளர்,
வட இலங்கை சுதேச வைத்திய சபை.

C-1649

## சவூதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவிற்கும் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தொழிலாளர்களுக்கு (Labourers) உடன் பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்படும். விரும்பினோர் பாஸ்ப்போர்ட், 6 படங்கள் என்பனவற்றுடன் இன்றும் நாளையும் நேரில் வரவும்.

முகவரி:

க. மு. வைத்தீஸ்வரன்,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

முக்கிய குறிப்பு:
(நாளை 9ந் திகதிக்குப் பின் மேற்படி வேலைகள் சம்பந்தமான விபரங்கள் கவனிக்கப்படமாட்டா.) C 1639

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 28ம் நாள் (10-4-86) வியாழக்கிழமை பகல் 10-15மணி தொடக்கம் 12-25மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| **ஜெகநாதன்** | **நந்தினி** |
| (லங்கா சிமெந்து லிமிட்டெட், K. K. S.) | (அரசினர் வைத்தியசாலை, அம்பாறை) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

| | |
|---|---|
| திரு. திருமதி நா. செல்லையா | திரு. திருமதி ச. கணேசன் |
| Dr. and Dr. [Mrs] நாகநாதர் | 'வேளா தோப்பு' |
| 'தேவி வாசம்' | கல்வியங்காடு, |
| சங்கானை. | யாழ்ப்பாணம். |

C-1650

## 'பாரசூட்'களில் இராணுவ

# உதவிப்பண்டங்களை போட்ட தெ.ஆபிரிக்க விமானம் சுடப்பட்டது!

லண்டன், ஏப். 7

**பாரசூட்களில் இராணுவத் தளபாடங்கள் உட்பட உதவிப்பண்டங்களைப் போட்ட தென்னாபிரிக்க விமானப்படை விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்விமானத்திலிருந்து போடப்பட்ட சில இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றியுள்ளதாக அங்கோலா அறிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் இரவு வேளை அங்கோலாவிற்குள் மூன்று தென்னாபிரிக்க 'ஹேர்க்குலிஸ்' இராணுவ போக்குவரத்து விமானங்கள் நுழைந்தன. இவை 'யூனிற்ரா' என்ற அங்கோலா அரசுக்கு எதிரான கிளர்ச்சிப்படைகளின் தளங்கள்மீது உதவிப்பண்டங்களை பாரசூட்கள் மூலமாகப்போட்டன.

இந்த வேளையிலேயே இவ் விமானங்களில் ஒன்று அங்கோலா அரச படைகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

சுடப்பட்ட விமானத்திலிருந்த தென்னாபிரிக்க விமானிகளையும் கைது செய்துள்ளதாகவும், மற்றொரு விமானம் சிறு பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அங்கோலா அரசு கூறியுள்ளது.

அங்கோலா ஒரு மாக்ஸிய கம்யூனிஸ்ட்நாடாகும் கியூபா, சோவியத் யூனியன் ஆகியன இந்நாட்டுக்கு முழுஅளவில் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கிவருகின்றன.

அங்கோலா அரசுக்கு எதிரான வலதுசாரி கிளர்ச்சிப் படையே 'யுனிற்ரா' ஆகும். இந்த 'யூனிற்ரா' கிளர்ச்சிப் பிரிவுக்கே 'ஸ்ரிங்கர்' என்ற தோளில் சுமந்து பாவிக்கும் விமான எதிர்ப்புக்கருவிகளை வழங்கப்போவதாக அமெரிக்கா அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது,

இதேவேளைஇந்த 'யுனிற்ரா' இயக்கத்தினரை வேட்டையாடுவதில் கியூபாவும், சோவியத் யூனியனும் அங்கோலாவுக்குத் தாம் உதவப்போவதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. [கி]

உலகச் செய்திகள்

## பிலிப்பைன்ஸ் செல்லும் முதலாவது அமெரிக்கர்!

மணிலா, ஏப். 7

பிலிப்பைன்ஸுக்கு அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் திரு. கெஸ்பர் பெயின் பேக்கர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

திருமதி அக்கினோ அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் பிலிப்பைன்ஸ் செல்லும் முதலாவது அமெரிக்கப் பிரமுகர் திரு பேக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் அமெரிக்காவுடனான உறவு, பொருளாதார-இராணுவ தொடர்புகள் என்பன பற்றி திரு. பேக்கர், திருமதி அக்கினோவுடனும், அவரது சிரேஷ்ட அமைச்சர்களுடனும் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க இராணுவத்தளம் பற்றியும் திரு பேக்கர் பேச்சு நடத்துவார். இத்தளம் அமெரிக்காவுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது இக்குத்தகையைப் புதுப்பிக்கும் ஏல விற்பனை சம்பந்தமாகவும் பேக்கர் அக்கினோவுடன் பேசுவார்.

இராணுவத் தொடர்புகளை விடப் புதிய பொருளாதார உறவுகள் குறித்தே திரு. பேக்கரிடம் பிலிப்பைன்ஸ் அரசு கூடுதலாக எதிர்பார்க்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## ஜலந்தர் நீதிமன்றில் 6 பொலிஸார் கொலை!

ஜலந்தர், ஏப். 7

பஞ்சாப் ஜலந்தரிலுள்ள நீதிமன்றமொன்றில்ஆறுபொலிஸ்காரர்கள் கடந்தசனிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்கொலைகளுக்குத் தாமே பொறுப்பு என்று 'காலிஸ்தான் கமாண்டோக்கள்' என்ற தீவிரவாதப்பிரிவு உரிமை கோரியுள்ளது.

பஞ்சாப்மாநிலத்தில் கடந்த சிலவாரங்களாக இடம்பெற்றுவரும் பொலிஸ் அடக்குமுறைகளைக் கண்டித்தே இக்கொலைகளை நடத்தியதாக அந்தப் பிரிவு கூறியுள்ளது.

கூடவே பொலிஸ் அடக்குமுறைகள் தொடருமானால் மேலும் இதுபோன்ற சம்பவங்கள நிகழும் எனவும் பஞ்சாப் மாநில பொலிஸ் இயக்குநர் திரு. றெபேரோவுக்கு இந்த இயக்கம் கடும் எச்சரிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

இதேவேளை பஞ்சாப் தீவிரவாதிகள் விடயத்தில் ஈவிரக்கம்காட்டக்கூடாதென திரு. றெபேரோ தமது பொலிஸாரைக் கேட்டுக்கொண்டுள்ளார். [கி]

## பம்பாய் பொலிஸாரால்

# சர்வதேச பயங்கரவாதி சோப்ராஜ் கைது!

பம்பாய், ஏப். 7

சர்வதேசக் குற்றவாளி சார்ள்ஸ் சோப்ராஜ் நேற்று பம்பாயில் வைத்துக் கைது செய்யப்பட்டார் இவருடன் இவரது சகாவான பிரிட்டிஷ்காரர் டேவிட் ஹோல் என்பவரும் கைதாகியுள்ளார்

சிறை உடைப்பு மற்றும் பயங்கர குற்றச்சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச பிரபல்யம் பெற்றிருந்த சார்ள்ஸ் சோப்ராஜ் கடந்த மார்ச் 16ந் திகதி புதுடில்லி திஹார் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல தடவைகள் முன்புஇவர் கைதுசெய்யப்பட்டிருந்தபோதிலும், சமயோசிதமாக சிறைக்கூடங்களிலிருந்து தப்பியோடுவதில் இவர்ஒரு சாமர்த்தியசாலியாவார்.

பல பெண்கள் கொலைசெய்யப்பட்டமை, போதைவஸ்து பாவனை, கடத்தல்கள் என்பன தொடர்பாக சார்ள்ஸ் சோப்ராஜ் பெரிதும் தேடப்பட்ட ஒருவராவார்.

இவரது சகபாடியான பிரிட்டிஷ்காரர்டேவிட்ஹோல் இருமாதங்களுக்கு முன்னர் புதுடில்லியில் போதைவஸ்து சம்பந்தமாகக் கைதாகி பிணையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் இந்த பிரிட்டிஷ்காரரே சார்ள்ஸ்சோப்ராஜின் திஹார் சிறைத் தப்பியோட்டத்துக்கு உதவியாக இருந்தார்.

சோப்ராஜ் இத்துடன் இரண்டாவது தடவையாக பம்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முன்பு 1976இல் இவர் பம்பாய் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கிரேக்கம், நேபாளம், தாய்லாந்து, பிரான்ஸ், ஈரான் உட்பட இன்டர்போல் பொலிசாரால்கூட சார்ள்ஸ் சோப்ராஜ் இன்றும் அவசியம் தேடப்படும் ஒருவராகவிளங்குகிறார்.

## மாநிலச் செய்தி

(சென்னை)

நேற்று முன் தினம் தொடக்கம் சென்னை மாநிலச் செய்தி ஒலிபரப்பு காலைஆறு நாற்பத்தைந்துக்கு மாற்றப்பட்டுள்ளது. [கெ]

## போராளிகளைச் சந்திக்க

# விஜயகுமாரணதுங்கா இந்தியா செல்வார்

[கொழும்பு]

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ விடுதலைப் போராளிகளை விரைவில் தாம் சந்திக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சியின் அமைப்பாளர் திரு விஜயகுமாரணதுங்க நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்

இந்தியாவில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பு எப்பொழுது, எந்த அமைப்புடன் என்பதுபற்றிய விபரங்கள் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

இதேவேளை திரு ரணதுங்காவின் சந்திப்புப்பற்றி உத்தியோகபூர்வமாக இதுவரை தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று 'ஈரோஸ்' அமைப்பு கூறியுள்ளதுடன், சிங்கள முற்போக்கு அணியினருடன் தமது உறவை வளர்த்துக் கொள்ளத் தாம் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. [இ-ரா]

## பண்டத்தரிப்பில்

# மின்தறி ஆலை மூடப்பட்டதை ஆட்சேபித்து மறியல்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறியாலை மூடப்பட்டதையடுத்து தமக்குப் போதியளவு நஷ்டஈடு வழங்குமாறு கோரி சேவை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் ஊழியர்கள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மறியல் போராட்டம் ஒன்றை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். சங்கத் தலைமையகத்தின் பிரதான வாசலைக் கிடுகு வேலி போட்டு அடைத்து எவரும் உட்புகாத முறையில் இந்த மறியல் போராட்டம் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இதனால் சங்கத்தின் செயற்பாடு முற்றாக ஸ்தம்பித்த நிலையை அடைந்துள்ளது தமது கோரிக்கை பலனளிக்கும்வரை இந்த மறியல் போராட்டம் தொடரும் என்று வர்த்தக ஊழியர் தொழிற்சங்க பண்டத்தரிப்பு கிளைத் தலைவர் திரு. க. சுப்பிரமணியம் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

இந்தமறியல்போராட்டத்தினால் பொது மக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்றும் தொடர்ந்து பலத்த நஷ்டத்தில் இயங்கிவரும் சங்கம் இந்த மறியல் போராட்டத்தினால் மேலும் பாதிக்கப்படும் என்றும் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரை சந்தித்து மேல் நடவடிக்கை பற்றி தாம் ஆலோசிக்கவிருப்பதாகவும் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. ஆ. ஜேசுதாசன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

# "வாழ்நாள் முழுவதும் போராளியாக வாழ்ந்தார்"

(யாழ்ப்பாணம்)

'டானியல் கடைசி வரைக்கும் கீழ்த தட்டு மக்களுக்காகவே வாழ்ந்து தன் இலட்சியத்தைச் சாதித்தார் அவர் வாழ்நாள் முழுவதும்போராளியாகஇருந்தார் போராட்டமே அவரது வரலாறு'' இவ்வாறு அமரர் டானியலின் அஞ்சலிக் கூட்டத்தில் எழுத்தாளர் திரு தெணியான் அஞ்சலி உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

வதிரி தமிழ் மன்றம் நடாத்திய இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு மேறுடி மன்றத் துணைத் தலைவர் திரு மு க. கமலாகரன் தலைமை வகித்தார்.

திரு தெணியான் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

''இன்னமும் சாதிப் பிரச்னைகளை ஏன் எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்று பலர் கேட்கிறார்கள். அப்படியானால் யாழ்ப்பணத்தில் சாதிப்பிரச்சனை தீர்ந்து விட்டதா? இந்தப் பிரச்னை தீரும் வரைக்கும் நாம் எழுதிக்கொண்டே இருப்போம். சைவமும், தமிழும் வளர்த்த என்னை அந்தப் பாரம்பரியத்துக்கு வெளியே வந்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகச் சிந்திப்பதற்குத் தூண்டியவர் அமரர் டானியல் அவர்கள்தான் அவர் தான் நேசித்த மக்களை என்றும் பிரிந்து வாழ்ந்ததில்லை. தனது கருத்துக்களை வருங்காலத்தில் இலக்கிய எதிரிகளும் அரசியல் எதிரிகளும் திரித்துக் கூறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் விரும்பினார்'' என்றார்

நெல்லை க. பேரன் தமது உரையில்''அமரர் டானியல் வடமராட்சி மண்ணின் மீதும் மக்கள் மீதும் அசையாத அபிமானமும் நம்பிக்கையும் கொண்டவர் 'தண்ணீர்' என்ற நாவலில் கரவெட்டித் தண்ணீர்ப் பிரச்னையை அழகாக எழுதியுள்ளார். 20 ஆண்டுகளுக்கு முன் கரவெட்டிப் பகுதியில் சாதிக் கொடுமைக்கு எதிராகப் போராடியதுடன் அங்குள்ள தடிப்புள்ள சாதிமான்களின் உண்மைப் பெயர்களையே தமது கதையில் எழுதிச் சலசலப்பை ஏற்படுத்தினார். துணிச்சல் கொண்ட இந்த எழுத்தாளர்தனது நாட்டைச் சேர்ந்த மற்றஎழுத்தாளர்களையும் பல வகைகளிலும் ஊக்குவித்தார் மனித நேயம் கொண்ட இவரை இழந்தது ஈழத்து இலக்கிய உலகின் பேரிழப்பு எனலாம்'' என்றார்.

சட்டத்தரணி திரு. செ. பேரின்பநாயகம் பேசுகையில்

(7ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

ஆமை ஆயிரம் முட்டைகள் இட்டபின்னும் அமைதியாக அடங்கியிருக்கும். கோழி ஒரு முட்டையிட்டதும் கொக்கரிக்கும். ஆமையைப்போலிரு. கோழியைப் போல நடவாதே.

—சிவயோகசுவாமிகள்.

# நமது நோக்கு

## ஆசிய கிண்ணம் இலங்கைக்கு அமைதி அளிக்குமா?

இரண்டாவது 'ஆசிய வெற்றிக்கிண்ண கிரிக்கட் போட்டியில் இலங்கையின் வெற்றியை நாம் மனமாரப்பாராட்டுகின்றோம் அது நாட்டுமக்களுக்குஒருபொது விடுமுறையையும் தட்டித் தந்திருக்கின்றது.

சிங்கள தமிழ் புதுவருடத்தையொட்டி மூன்று விடுமுறைகள் கிடைத்த போதும் அவற்றைச் சுவைக்கக்கூடிய சூழ்நிலை நாடெங்கிலும், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் சூனியமாகவே இருக்கின்றது. மக்களுக்கு விடுதலை வேண்டுமே.

கிரிக்கெட்டில் இத்தகைய புகழுக்குரித்தான நாட்டில் மக்கள் உயிருடன் எரிக்கப்படுவது எவ்வகையில் பொருத்தமாகும். இத்தகைய செய்திகளை நம்பமுடியாத வெளிநாட்டுத் தகவல் நிறுவனங்கள். இவற்றை நேரில் பார்க்கவிரும்புவது நியாயமாகும்.

திருமதி வில்லிஸ் போன்ற சுற்றுமாற்றுக்காரர்களைத்தவிர திறந்த மனம் படைத்த பத்திரிகையாளர் இக்கொடுமைகளை நேரில் பார்க்கமுடியும்; முடிகிறது.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவியிருக்கும் யாழ்ப்பாணம் வருவதானல் ''கோரக் கிரிக்கட்'' மிகச்சுலபமாகக் காணமுடியும்.

தத்தம்வீடுகளில், வேலைத்தலங்களில், வயல்களில், தோட்டங்களில், நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் இறைவனடி சேரலாமென்ற உண்மை உலகில் வேறெங்கும் இந்த அளவில் காண்பதரிது.

தமிழ்ப் போராளிகள் அரசின் ஆயுதக் குவிப்பு தமக்குகவலாமென்று கிண்டல் செய்தபோதும் இவ்வித போரில் மக்கள் மடிவது பரிகாசமாகாது.

எனவே இலங்கைக்கு ராணுவ உதவியென்ருல் இலங்கை மக்களைக் கொல்வதற்குதவும் திட்டம் அது என்று உலகம் அறிய வேண்டும்.

பாகிஸ்தான் போன்ற நேசநாடுகள் இந்த உண்மையை அறியாதவையல்ல. ஆபத்துக்கு தவுபவனே உண்மை நண்பன் என்ற ரீதியில் இந்த உதவி கிடைக்கிறது.

இலங்கை ஆபத்துக்குள்ளாகியிருப்பதை 'ஆசிய கிண்ணம்' மூடி மறைக்கும் வல்லமையற்றது அதற்குதவிய பாகிஸ்தான், தனது நண்பனைப் பாதுகாக்க ராணுவ உதவியை நிறுத்தி ஆக்கபூர்வமான ஆலோசனை நல்க வேண்டும்.

தாம் போக வழிகாணுது தத்தளிக்கும் ஒருவர் இன்னெருவரின் பாதுகாப்புக்கு முனைவது சடினம் என்ருலும் அண்டை நாடாகிய இந்தியாவுடன் இணைந்து, சார்க் நிறுவனத்தைச் சீராக்கிப் பலப்படுத்தும் வகையில் இலங்கைக்கு சமாதான வழிவகுக்க முன்வரவேண்டும்.

ஆசிய கிரிக்கட்டில் தலைநிமிர்ந்து நிற்கும் இலங்கையும், பாகிஸ்தானும் களிமண் கால்களையுடைய தெய்வங்கள் என்ற பரிகாசத்திற்கு இடமளிக்கலாகாது.

## ''மரணம் ஒரு நல்ல நண்பன், தம்பி!''

புகழ்மிக்க மானிப்பாய் மண்ணில் ஒரு பிரபல குடும்பத்தில் பிறந்து, சுமார் எழுபது வருடமாக கிறிஸ்தவ போதகராக, நாடுமுழுவதிலும் அரும்பணியாற்றி ஈற்றில் அகில இலங்கை மெதடிஸ்ற் திருச்சபைத் தலைவராக உயர்ந்த வணக்கத்துக்குரிய டாக்டர் ஜேம்ஸ் மேதர் மறைந்த செய்தி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு பேரிழப்பைக் குறிக்கும்.

எமக்கும் எங்கள் பத்திரிகைக்கும் இச்செய்தி ஒரு தனித்துவமான சோகத்தைத்தருகிறது.

தெய்வீக சேவையில் திளைத்திருந்த இம்மாமனிதன் நீண்ட வாழ்வென்ற நல்வரம் பெற்றவர். அதனை நன்ருக உணராத நாம் அவருடைய எண்பதாவது பிறந்ததினச் செய்தியை தவருக மறைவென்று பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தோம் சுமார் 12 வருடங்களுக்குமுன் நடந்த சம்பவம் அது.

அத்தவறு ஏற்படுத்திய சோகநாடகம் எமது பத்திரிகைக்கும் எமக்கும் என்றும் மறவாத அனுபவத்தையும் ஒருதூய தத்துவஞானியின் தரிசனத்தையும் அளித்தது.

எங்கள்செய்தியை ஆதாரமாகக்கொண்டு கொழும்பு-குறிப்பாக ஏரிக்கரை டெயிலி நியூஸ், ஒப்சேவர் வாரப் பதிப்பு வண. டாக்டர் ஜேம்ஸ் மறைந்தார் என்று மட்டுமல்ல அவருடைய வாழ்க்கை நலத்தையும் மிகக் கச்சிதமாகக் குறிப்பிட்டன.

இந்த நாடகத்துக்கு நாமே 'வில்லன்' என்ற செய்தியை உடனடியாக நாம் அப்பெருந்தகைக்குத் தெரிவித்தபோது, 'தம்பி மரணம் ஒரு நல்ல நண்பன்' என்ற குதூகலத்துடன் விடையளித்த அமரர் மேதர், ''உங்களுக்கு நன்றி; நான் அவ்வுலகுக்கு போகும் அனுபவத்தையும், அதனைத் தொடர்ந்து இங்கு நடைபெறும் அரும்பெரும் காட்சிகளையும் உயிருடன் இருக்கும்போதே சுவைத்துக்கொள்ள உதவினீர்கள்'' நன்றி என்ற கிண்டலை நாம் ஒருபோதும் மறந்ததில்லை.

எங்களுக்கு ஒரு ஆப்த நண்பனுகவும் அரிய கருத்துக்களை வழங்கி வந்த குருவாகவும் இத்தெய்வீக மனிதனை நாம் மதித்து வந்தோம்.

''பத்திரிகைகள் ஆக்கவும் அழிக்கவும் வல்ல அதிகார சாதனங்கள்'' என்பதே சாதாரண கருத்து. அதன் பொறுப்புணர்ச்சியும் விழிப்புணர்வும் மிகப்பெரிதென்று நாம் மன்னிப்புக் கோரியபோது, ''எவருக்கும் எதற்கும் அவ்வித பெருமிதம் உரித்தானதல்ல; அவனன்றி ஓர் அணுவும் அசையா''தென்று நினைவுறுத்திய மகானைத் தெய்வம் என்ருல் அது மிகையாகாது.

# ''மிஃராஜுந் நபி''

இஸ்லாத்தில் ஈமான் என்ருல் நம்பிக்கை. யகீன் என்ருல் உறுதிப்பாடு. நமது சிந்தனைக்கு ஒரு விசயத்தை எடுக்கும்போது அது இப்படியிருக்குமா, அல்லது அப்படியிருக்குமா, இப்படி நடந்ததா, நடக்கக்கூடிய காரியமா என்ற கேள்விகள், சந்தேகங்கள் இஸ்லாம் கூறும் ஒரு விசயத்தில்சம்பவத்தில்ஏற்படுமேயானுல் ஒரு முஸ்லீமின் யகீன் என்னும் உறுதிப்பாடு சிதறுண்டு போய்விடும். இவ்விடயத்தில் ஒரு முஸ்லீம் உண்மை முஸ்லீமாக இருக்க முடியாது. மனித அறிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதைக் கொண்டு இஸ்லாம் கூறும், காட்டும் விசயங்களை, சம்பவங்களை எடைபோடமுடியாது!

உலக வாழ்க்கை போல் மரணத்தின் பின்புள்ள வாழ்க்கை இருக்காது. உலக அசைவுகள் உணர்வுகள்போல் மறு உலக வாழ்க்கையில் இருக்காது. அது மனிதனுல் கற்பனை செய்யமுடியாத ஒரு வாழ்க்கை என்று இஸ்லாம் இடித்துக் கூறுகின்றது. இவைகளை மனிதன் மறுத்தால் அது அவனின் ஈமானின் பெலகீனமாகும்.

பெருமானுர் முஹம்மத் [ஸல்] அவர்கள் மிஃராஜ் என்னும் விண்வெளி யாத்திரை செய்தார்கள் என்பது இஸ்லாம் கூறும் சரித்திர உண்மை. ஆரம்பத்தில் நம்ப மறுத்தது ஒரு பெருங்கூட்டம். பொய் என்று பிரச்சாரம் செய்தது- அதற்காக நாடு நாடாகப் பலர் சென்ருர்கள் அன்று கிருஸ்தவர்களால் சொலமன் தேவாலயம் என்று அழைக்கப்பட்ட பைத்தூல் முகத்தஸ் ''அல்-அக்ஸா'' (அல்-அக்ஸா) பள்ளிவாசலில் வைத்துத்தான் ஒரு லட்சத்தி இருபத்தி நாலாயிரம் தீர்க்க தரிசிகளால் சோபனம் கூறப்பட்டு, வானவர்களால் வாழ்த்தப்பட்டு பெருமானுர் [ஸல்] அவர்கள் விண்வெளி யாத்திரையை ஆரம்பித்தார்கள்.

பெருமானுர் [ஸல்] அவர்கள் அல்லாஃவினுல் அவனது ஒளியிலிருந்து படைக்கப்பட்டவர்கள். அவர்கள்ஒளியிலிருந்து அண்ட சராசரங்களும் இதர சிருஷ்டிகளும் படைக்கப்பட்டன. அவர்கள் மனிதராக இருந்தாலும் அவர்கள் ஒளி ஏழு வானங்களுக்கு அப்பாலும் வீசிக்கொண்டிருந்தது. ''இரவில் தைக்கும் ஊசி தவறவிட்டால் பெருமானுர் (ஸல்) அவர்கள் வருகையின்போது அவர்கள் உடலிலிருந்துவரும் பிரகாசத்தைக் கொண்டு ஊசியைத் தேடி எடுத்துகொள்வோம்'' என்று அவர்கள் தர்ம பத்தினி அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் கூறியிருப்பது சிறந்த சான்ருகும்!

ஒளியினுல் படைக்கப்பட்ட ஒளிமயமான பெருமானுர்

[7ம் பக்கம் பார்க்க]

## வாவியில் ஒருவர் சூட்டுக்குப் பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடாவில் நேற்று மாலை திடீர் தேடுதல்வேட்டையில் அதிரடிப் படையினர் ஈடுபட்டனர்.

அச்சமயம் மட்டக்களப்பு வாவியைக் கடந்து தப்பிச் செல்ல முயன்ற ஒருவர்மீது அதிரடிப் படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். நீந்திச் சென்ற அந்த நபர் நீருள் மூழ்கினுர். அதிரடிப்படையினர் நீருள் மூழ்கிய அந்த நபரை நோக்கி 'கிறினேட்' வீசிவிட்டு நீருள் இறங்கித் தேடுதல் நடத்தினர். சடலம் கிடைக்காததைத் தொடர்ந்து படையினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர்.

வாவியில் மூழ்கியவர் கருணுகரன் என்றழைக்கப்படுபவர் எனத் தெரியவருகிறது.

## வடக்கு, கிழக்கு ஆசிரியர் சம்பளக் காசோலைகள் தமிழில் கிடைக்கும்

### கோரிக்கைகளை அரசு ஏற்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மகாணங்களிலுள்ள மாவட்டக் கல்விப் பணிமனைகள், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் காசோலைகளைத் தமிழில் எழுதி வழங்க வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமானே ஏற்றுக் கொண்டுள்ளார் என சங்கத் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.விஜேமானேயை அமைச்சில் சந்தித்து ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் பேச்சுவார்த்தை நடாத்தினுர். அப்பேச்சுவார்த்தையின் போது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் காசோலையைத் தமிழில் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போதே அமைச்சின் செயலாளர் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை விரைவில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது, பட்டதாரிச் சம்பளம் பெருத ஆசிரியர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அமைச்சின் செயலாளர் ஏற்றுக் கொண்டுள்ளாராம். 1984, 1985-ம் ஆண்டு நடந்த பல்கலைக்கழக இறுதிப்பரீட்சையில் சித்தியெய்திய ஆசிரியர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவில்லையென்றும், ஆனல் அதே சமயத்தில் இப்பரீட்சைகளில் சித்தியெய்திய ஆசிரியர்களல்லாத சகலருக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனவும், இதனுல் சேவையிலிருந்துகொண்டு பரீட்சையில் சித்தியெய்திய ஆசிரியர் தமது சேவைமூப்பை இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையைத் தெளிவாக விளக்கிக் கோரிக்கையை வலியுறுத்திய போதே அமைச்சின் செயலாளர் இக்கோரிக்கையை ஏற்றுள்ளார் எனவும் இ. த. ஆ. சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார். இதனுல் தற்போது பட்டதாரிச் சம்பளம் பெருது சேவைசெய்யும் பல ஆசிரியர்கள் பட்டதாரிச் சம்பளம் பெறும் வாய்ப்பினை விரைவில் பெறவுள்ளார்கள்.

## சவளக்கடையில் 140 குடும்பங்கள் வெளியேற்றம்

(கல்முனை)

கல்முனைத் தொகுதியில் உள்ள சவளக்கடைக் கிராமத்தில் ஆயுதப்படை முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கிராமத்திலிருந்து 140 குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

வெளியேறியுள்ள இக்குடும்பங்கள் பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில்தஞ்சம்புகுந்துள்ளனர்.

இக் குடும்பங்கள் மீண்டும் தங்கள் சொந்த வீடுகளில் பாதுகாப்புடன் குடியிருப்பதற்கு வசதி செய்வதுடன், அக்கிராமத்திலிருந்து ஆயுதப் படை முகாமை அகற்றுமாறு கோரி கல்முனைப் பிரஜைகள் குழுவும் சம்மாந்துறை எம். பியும் வேண்டுகோள் விடுத்துளளனர். (ய-மா)

## முட்கம்பிபோட்டு பாதை தடை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆரையம்பதிக்கும் காங்கேயன் ஓடைக்குமிடையேயுள்ள பாதை முட்கம்பி போட்டுத் தடைசெய்யப்பட்டுள்ளது.

காங்கேயன் ஓடைக் கிராம முஸ்லிம் மக்கள் காத்தான்குடிப் பட்டினத்திற்குக் செல்லும் பாதை இதுவாகும்.

இதனுல் இரு சமூகத்தவருககுமிடையே சிறு சலசலப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [மா]

## அந்த உத்தியோகத்தரை ராணுவம்விட்டது ஆனுல்...

[வவனியா]

கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த அம்பலவாணர் ஞானப்பிரகாசம் (38 வயது) என்பவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த இவர், ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையத்தில் தொலைத்தொடர்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் விடுவிக்கப்பட்ட போதிலும் இவரது அடையாள அட்டையை ஆயுதப்படையினர் வழங்க மறுத்துவிட்டனராம்.

## ஓமந்தை உப தபாலகம் மூடப்பட்டது

[வவனியா]

ஓமந்தை உப தபால் அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

இந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டதைத்தொடர்ந்து மக்கள் இச்சுற்றுடலிலிருந்து வெளியேறிபதை யடுத்தே இந்த உப தபால் அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

ன---

_ர்ச்சி

ஜ, ஆரா
டிருக்கும்
சல்வச்சந்
ம், பாதிக்
ு நாக
காவில்,
ஆலயத்
விக்கிரகங்
பிரச்னை
ஆலயங்
_ருப்பது,
ந்துக்கள்
_ங்குகளை
ருப்பது
ரச்னைகள்
இக்குழுவி
ுச்சொன்

ஆராய்ந்து
டுப்பதாக
ழுவுக்குத்
ய-மா]

## ஆயுர்வேதக் கல்லூரிமுன் மாணவிகள் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக் கல்லூரிக்கு முன்னுல், இறுதிவருட மாணவிகளும், பெற்றோர்களும் நேற்றுச் சுலோக அட்டைகளுடன் மறியல் செய்ததனுல் நேற்று நடைபெறவிருந்த பரீட்சை தடைப்பட்டது.

அரசு அங்கிகாரமளிக்கப் பட்ட பரீட்சையை நடத்துமாறு கோரி இறுதிவருட மாணவிகள் சுமார் 20 பேர் நேற்றுக் காலை 7.00 மணிக்கு கல்லூரியின் இருவாசல்களிலும் மறியல் செய்தனர். இருவாசல் 'கேற்று'களும் சங்கிலி போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. வேலியில் சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

சுலோக அட்டைகளில் 'நடத்தும் பரீட்சையை வலுவுடையதாக நடத்துக', 'தராதரம் இல்லாத பரீட்சையை உடனடியாக நிறுத்துக,' 'அரசாங்க அங்கீகாரம் பெற்றபின் எமது பரீட்சையை நடத்துக', போன்ற வசனங்கள் இடம்பெற்றிருந்தன.

டி. ஏ. எம். பட்டச்சான்றிதழ் பரீட்சை வேண்டும் என்றும் பாடசாலையின் அரச அங்கீகாரத்தை மீண்டும் பெறவேண்டும் என்றும் மறியல் செய்வோர் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

காலையில் நிர்வாகத்தினர் வந்தபோது, மறியல் நடந்ததால், உள்ளே செல்லமுடியாததால் திரும்பிச் சென்றனர். பிற்பகல் வரை மறியல் நீடித்தது. பிரச்னை தீரும்வரை மறியல் தொடரும் என மாணவிகள் தெரிவித்தார். [க]

## புத்தாண்டை---

(1ம்-பக்கத் தொடர்ச்சி

சொந்த இடங்களுக்குச்செல்வதற்கு இ. போ சபை போக்குவரத்து வசதிகளைச் செய்துள்ளது.

இது இவ்வாறிருக்க, கடந்த மாதம் 25-ம் திகதி ஓமந்தையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தீமூட்டி எரிக்கப்பட்ட உத்தரதேவி ரயில் பெட்டிகளும், எஞ்ஜினும் நேற்றுப் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாரந்தூக்கி மூலம் அனுராதபுரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டன (மா)

## அகதிகள்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளின் புனர்வாழ்வுக்கெனவழங்கப்பட்ட மூன்று லட்சம் ரூபா விரைவில் இம்மக்களுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய திட்டம் ஒன்றினை வகுக்க யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டம்பற்றிஆராய்ந்து நகல்திட்டமொன்றினைச் சமர்ப்பிக்க செயலக உயர் அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அறவழிப் போராட்டக்குழுவின் முயற்சியினுல் கிடைக்கப்பெற்ற இக்குறித்த நிதியினை இம்மக்களுக்குப் பயன்படுத்த உடன்நடவடிக்கை எடுக்கும்வண்ணம் குழுவினர் அரச அதிபரிடம் நேரில்கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.


எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
ரஜனி - கமல்
இளமை
ஊஞ்சலாடுகிறது

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
நடித்த
வாயாடி
[புதிய பிரதி]

5வது வாரம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)



ல் நூற்றுண்டுக்கும்
லாக தொடர்ந்தும்
முன்னணியில்!



இலங்கையில் பி.வீ.சீ. குழாய் உற்பத்தியை முதன்முதல் ஆரம்பித்ததே எஸ்-லோன். இப்போது கால் நூற்றுண்டும் கழிந்துவிட்டது. ஆனுல் தொடர்ந்தும் முன்னிலையே வகிக்கிறது எஸ்-லோன். எஸ்-லோன் குழாய்கள்,இணைப்புகள், பீலிகள் என்பன நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பிரபல்யம் பெற்றுவிட்டன.

ஆமாம்! நீர் விநியோகம் என்றதுமே இன்று நினைவுக்கு வருவது எஸ்-லோன் தானே. ஏன் தெரியுமா? இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எஸ்-லோன் அதன் தரச் சிறப்பின் தனித்துவத்தைப் பேணிவந்துள்ளது.

உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான பரிசோதனையும் தரக்கட்டுப்பாடும் இதனை உறுதிப்படுத்துகின்றன. எஸ்—லோன் என்ற பெயர் தாங்கிய பி.வீ.சீ.குழாய் ஒவ்வொன்றிலும் இந்த உறுதிப்பாடு உண்டு.

ஆயுள் முழுவதும் தொல்லையில்லாத, தங்கு தடையற்ற நீர் விநியோகத்திற்கு, பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், குழாய் பொருத்துநர்கள், ஒப்பந்தகாரர்கள் அனைவரும் நம்பிப் பாவிப்பது எஸ்-லோன். முன்னேடி மட்டுமல்ல; முன்னேக்கிச் செல்வதும் எஸ்-லோன்.

S-lon



பி.வீ.சீ. குழாய்



GARADS

மீட்டர் ரூபா 13.05 தொடக்கம்

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 93716-9.

### ஆரம்ப சுகாதார நிலையங்களில்

# குழந்தைகள், கர்ப்பவதிகளுக்கு வைத்திய சிகிச்சை

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் நெருக்கடியைக் குறைக்குமுகமாகவும் நோயாளிகளின் போக்குவரத்து சிரமங்களை தவிர்க்குமுகமாகவும் கிராமங்கள் தோறும் செயற்பட்டு வரும் ஆரம்பசுகாதார நிலையங்களில் குழந்தைகளுக்கும், கர்ப்பவதிகளுக்குமான வைத்திய சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்ப சுகாதாரகுழு மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க ஒவ்வொரு மாதமும் முதற் செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி மேற்கிலும், இராச கிராமத்திலும் முதற்சனிக்கிழமை உபயகதிர்காமத்திலும் முதல் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வராவிலும், இரண்டாவது செவ்வாய் கரவெட்டி பிரசவவிடுதியிலும், இரண்டாவது வியாழன் பருத்தித்துறை 4ம் குறுக்குத் தெருவிலும் இரண்டாவது சனி மணற்காட்டிலும். இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை பரு. ஆச்சிரமத்திலும், மூன்றுவது செவ்வாய்க் ழமை கிழவி தோட்டத்திலும், மூன்றுவது சனிக்கிழமை நாவலர் மடத்திலும், மூன்றுவது ஞாயிற்றுக்கிழமை சோளங்களிலும், நான்காவது செவ்வாய்க்கிழமை கற்கோவளத்திலும் நான்காவது வியாழக்கிழமை மாதனையிலும், நான்காவது சனிக்கிழமை நாகர்கோவிலிலும், நான்காவது ஞாயிற்றுக்கிழமை தம்பசிட்டியிலும் இரண்டாவது திங்கட்கிழமை நவிண்டியிலும், மூன்றுவது வியாழக்கிழமை வல்வெட்டித்துறையிலும், நான்காவது சனிக்கிழமை இமையாணனிலும் கர்ப்பவதிகளுக்கும், குழந்தைகளுக்குமான வைத்திய சிகிச்சைகள் வைத்திய நிபுணர்களால் வழங்கப்படும் என்றும் மருந்துகளுக்காக மிகக் குறைந்த கட்டணம் ஆரம்ப சுகாதார தொண்டர்களால் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறையில் இயங்கி வந்த இலங்கை வங்கிக் கிளை நேற்று தொடக்கம் வங்கி அலுவல்களுர்காககரம்பன் சுருவில் ரேட்டில் தற்காலிக நீதிமன்றத்திற்கு அருகாமையில் இயங்கிவருவதாக இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

(வா)

## சனசமூக நிலையங்கள் புகார்

[சாவகச்சேரி]

சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சி அமைச்சினல் வழங்கப்படுகின்ற சனசமூக நிலைய நன்கொடைப் பணம் இன்னமும் கைதடி உப அலுவலகத்தால் வழங்கப்படவில்லை என கைதடிப்பகுதி சனசமூகநிலையங்கள் புகார் தெரிவித்துள்ளன.

இது சம்பந்தமாக இந்நிலையங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துடனும் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்துடனும் தொடர்பு கொண்டு வருகின்றன எனத் தெரிவ வந்துள்ளது.

## இன்றைய பலன்

மாதம்:- பங்குனி 26 (1986-4-8) கிழமை செவ்வாய்,

திதி:- சதுர்த்தசி மு. ப வரை

நக்ஷத்திரம்:- உத்தரட்டாதி மு. இ வரை

மேடம்:- எண்ணம் போல் எதுவும் நடவாது. தொழில் விடயத்தில் கவனம்வேண்டும். குடும்பத்தில் அமைதி வேண்டும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்,

இடபம்:- வருவாயில் மந்தம் ஏற்படும். அடுத்துக்கெடுப்பதற்குச் சிலர் முனையக்கூடும். எதிலும் அவதானம் வேண்டும்.

மிதுனம்:- பேச்சில் நிதானம் வேண்டும். பெரியோர் உதவி தாராளம் கிடைக்கும். குடும்பத்தில் சிறம்புக் குன்றும்.

கடகம்:- வாய்வுக்கோளாறு ஏற்படுவதற்கு இடம் உண்டு, உணவு விடயத்தில் கவனம் வேண்டும். புத்திரர்களாலும் செலவிற்கு இடமுண்டு

சிங்கம்:- கூடியிருந்து குழிப்பறிப்பதற்கு எத்தனிப்பர். அந்நியர் சகவாசம் தவிர்க்கப்படல்வேண்டும். விருந்தினர் வருகைக்கு இடம் உண்டு

கன்னி:- குடும்பத்தில் குதூகலம் பிறக்கும், பிறக்கும். களஸ்திரவழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு. இனசனக் கொண்டாட்டமும் உண்டு.

துலாம்:- உங்கள் காரியங்களில் எதிரிகள் குறுக்கிடுவர். எதிலும் உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள். தெய்வ சிந்தனை மேலோங்கும்.

விருச்சிகம்:- புத்திர வழியால் சிறப்புமுண்டு. தொழில் பொருள் இவைகளில் கவனம் வேண்டும் வஞ்சகர் உறவுகள் பிளவுகளை உண்டுபண்ணும்

தனுசு - எதிர்ப்புகள் மத்தியில் காரியங்கள் நடைபெறும். எக்காரியமும் பரமரகசியமாக இருக்கவேண்டும், இன்று எப்பொருளும் பொறுப்பேற்றல் நல்லதலல.

மகரம்:- தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் திருப்தி உண்டு. சகோதர சுகமும் உண்டு.

கும்பம்:- எண்ணியதில் தடையேற்படும். இல்லத்தில் கலகலப்புகளுக்கும் இடமுண்டு தொழில் விடயத்தில் கொல்லையுமுண்டு.

மீனம்:- உறவு முறைகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உடல் நலமும் சீராகும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# சைவ பரிபாலன சபையின் சமயபாடப் பரீட்சை முடிவு

[யாழ்ப்பாணம்]

சைவமகாசபையினரின் ஆதரவில் கடந்த நவம்பர் மாதம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சமயபாடப் பரீட்சை பெறுபேறுகள் பின்வருமாறு:

**2ம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்றோர்:**

பிரதீபா பற்பநாதன், ஜர்மிலி ஜீவராசா, ஆரணி சிவபாதசுந்தரம்.

**3ம்வகுப்பில் திறமைச்சித்தி பெற்றோர்:**

சத்தியவேணிசண்முகராசா' சமிலா சிதம்பரநாதன்.

**4ம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்றோர்:**

கீத்தா சிதம்பரநாதன்.

* விசேட கித்திபெற்ற மூவர்: சிவசுகல்யா சிவஞானலிங்கம், தனராஜ் பாலசுந்தரம், காந்தராஜ் பற்பநாதன்.

**5ம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்றோர்:**

விமலன் சிவபாதசுந்தரம், ஜர்மிலன் ஜீவராசா, ரூபகுமார் தற்பரன், கிருஷ்ணவேணி சண்முகராசா.

**7ம் வகுப்பில் விசேடசித்தி பெற்ற இருவர்:**

தயாளினி தற்பரன், கலைச்செல்வி சிவபாதசுந்தரம்.

* திறமைச்சித்திபெற்றவர்! ஜானகி இராசையா.

**8ம் வகுப்பில் திறமைச் சித்திபெற்றவர்**

மஞ்சுளா பாலசுந்தரம்.

**10ம் வகுப்பில் திறமைச் சித்திபெற்ற இருவர்:**

கிரிதரன் இரத்தினசிங்கம். இளங்கோவன் இராசையா.

## அதிபர்களுக்கு பாராட்டு

[கிளிநொச்சி]

''கல்வித்துறையில் நல்ல அனுபவமும் திறமையும் மிக்கவர்களான இருவர் பளை, பூநகரிப் பகுதிகளுக்கு கொத்தணி அதிபர்களாக நியமனம் பெற்றமை பாராட்டுக்குரியது'' என்று பளைப்பகுதி கொத்தணி அதிபர் ஏ பி செல்லையாவிற்கும் புனகரி கொத்தணி அதிபர் கு. சிவகுமாருக்கும் பரந்தன் கல்வி வட்டார அதிபர்கள் சங்கத்தால் அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியஜனுப் எம் எம் மன்சூர் கூறினர்

பரந்தன் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் வட்டாரக் கல்வி அதிகாரி நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது.

கல்விப்பணிப்பாளர் ஜனு. மன்சூர் மேலும் பேசுகையில், ''அரசின் கொள்கைக்கிணங்க பளை, பூநகரி, அக்கராயன் ஆகியன கொத்தணிப் பிரிவுகளாகின. பளைக்கொத்தணி அதிபர் ஏ பி செல்லையா பல துறைகளிலும் ஆற்றல் வாய்ந்தவர் அதேபோல் பூநகரிக் கொத்தணி அதிபரும் ஒரு திறமைசாலி இவரது பதவிக் காலத்தில் பூநகரி கல்வித் துறையில் முன்னேற்றம் காணும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என்றார்,

பரந்தன் இந்து மகாவித்தியாசாலை அதிபர் ம. பத்மநாதன், சிவ. ஐயாத்துரை, வட்டாரக் கல்வி அதிகாரி ஜனுப் எஸ் ஏ. சி இஞனா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## சந்தேகம் பிழைத்தது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆழக்கடலில் தாழப்பறந்து வேவுபார்த்த ஹெலிகொப்டர் கடலில் நடமாடிக்கொண்டிருந்த இரு படகுகளைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இரு மர்மப் படகுகள் ஆழ்கடலில் நடமாடிக்கொண்டிருப்பதாக மட்டக்களப்பு கல்லடி முகாமுக்குக் கிடைத்த தகவலின் பேரில் ஹெலிகாப்டர் ஒன்று உடனடியாக அவ்விடத்துக்குப் பறந்து சென்றது.

தாழப்பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்டர், இருபடகுகளையும் முகத்துவாரத்துக்குக் கொண்டுவரும்படி படகிலிருந்தவர்களுக்கு சமிஞ்சை செய்தது.

கரையை வந்தடைந்த இரு படகுகளும் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனவாம் அவ்விரு படகுகளும் மீன்பிடிப்படகுகளாம். [மா]

# "மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்க வேண்டும்"

[பண்டத்தரிப்பு]

''ஆசிரியருக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பு இன்று மாணவர் மத்தியில் அருகிவருவது கவலையளிப்பதாகவுள்ளது தமது கல்வி அறிவுக்கும் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக விளங்கும் ஆசிரியர் சமுதாயத்திற்கு மதிப்புக்கொடுக்கும் மனப்பான்மை மாணவர்களிடையே இருக்கவேண்டியது அவசியமானதாகும்.''

இவ்வாறு மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவிலும், பாடசாலைத்தினத்திலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி கூறினர்

வித்தியாலய அதிபர் அ தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உபஅதிபர் ச. அருள்சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினர். டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; ''கடந்த காலங்களில் இப்பகுதி மக்களுக்கு சிறந்த கல்விச் சேவையாற்றிவந்த இந்த வித்தியாலயம் தற்போது பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று மிளிர்வது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

சாரணீயம், முதலுதவி பயிற்சி ஆகியனவும் இங்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்து பாராட்டப்படவேண்டும்'' என்றார்.

மாதகல் பங்குத் தந்தை அருட்திரு. கிங்ஸ்லி சந்தியாப்பிள்ளை அடிகள் ஆசியுரை நிகழ்த்தினர். மனையியல்கூடத்திற்கான புதிய மின்இணைப்பை சு. வைரவநாதன் ஆரம்பித்து வைத்தார். பா.சில்களை திருமதி ஜொலிதா இன்னுசித்தம்பி வழங்கினர் வித்தியாலய ஆரம்பபிரிவு அதிபர் ம. சே. பெர்ஞண்டோ நன்றியுரை நிகழ்த்தினர். இறுதியில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இளைஞர் சடலம் அடையாளம் காணப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு தென் இந்தியத் திருச்சபைக்கு சமீபமாக இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியானவர் திருநகரைச் சேர்ந்தமிக்கல்பெர்ஞண்டோ ஜெரோன் [வயது 20] என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதே வேளை நேற்றையதினமும் கோணவில்ப் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் பலர் கைதாகி உள்ளதாகவும் தெரிய வருகிறது. வாகனம் ஒன்று கந்தன் குளத்திற்கு சமீபமாகத் தீ வைத்துக் கொளுத்தப் பட்டுள்ளது.


மலிவு விலையில்

**தரமான திருமணப்பரிசு**

DOUBLE ARM செற்றிசெற்
கடைசல் வேலைப்பாடுகளுடன் DOUBLE BED

**United Engineers Carpentry Workshop,**
91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(A 4 9)



பின்வரும் பொருள்கள்
**விற்பனைக்காகவுள்ளன**

I. பெரிய அளவிலான கனதிகூடிய வெற்றுத் தகரங்கள்
II. சிறிய அளவிலான தகரங்கள்
III. உருக்குலைந்த 'டின்'கள்
IV. வெற்றுப் போத்தல்கள்
V. செப்புத்தகடுகள்

கொள்வனவுசெய்ய விரும்புவோர் வேலைநாட்களில் 9-30—12-00 மணி வரை 'ஈழநாடு'வில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

A 551



**பிரயாண ஒழுங்குகள்**

(I) குவைத், டுபாய், சவுதிஅரேபியா
செல்பவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் உடனடியாகச் செய்துகொடுக்கபபடும்.

கிளீனேர்ஸ் (ஆண், பெண் இருபாலாரும்)

(II) டிறைவர் (மத்திய கிழக்கு சாரதி உத்தரவுப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு உடனடி ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும் )

அத்துடன் பாஸ்போட், விஸா, BOND, ரிக்கற் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேசல் ஏஜென்சி**
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
125 (455) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C 1629)

# யாழ். முஸ்லிம்சமாதானசபை கலைக்கப்பட்டதன் காரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். முஸ்லிம சமாதான சபை கலைக்கப்பட்டுள்ளதை விளக்கி துண்டுப் பிரசுரம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சம் வருமாறு:

யாழ்/சமாதானசபை, ஜமாஅத்தே இஸ்லாமிய இயக்கத்தினர் பள்ளிவாசல்களில் பயான் விளக்கவுரை செய்வதற்கு அனுமதிப்பது தொடர்பாக யாழ்/முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களை நீக்கவும் அதற்கான மார்க்கத் தீர்ப்பைப் பெற்றுக் கொடுக்கவும் எம்மத்தியில் பிரச்னைவளரக்கூடாது; பிளவு ஏற்படக்கூடாது எனும் நோக்கங்களைக்கொண்ட சிலர் ஒன்றுகூடி ஆரம்பித்தாகும்.

வல்ல அல்லாஹ்வின் உதவியால் அப்பணியை நாங்கள் முடித்த பின்னர் சில பிணக்குகளைத் தீர்த்துவைக்குமாறு வேண்டினுர்கள், அதனை நடுவர்களை நியமிதது அவர்களிடம் விசாரணையை ஒப்படைத்து அவர்களது தீர்ப்பலற்கு ஏற்ப நீதியை நிலைநாட்டினேம். இவ்வாறு எமது பணியைத் தொடருமாறு மக்கள் நிர்ப்பந்திக்கவே இத்தகைய ஓர் சபை தற்போதய சூழலில் அவசியமே என உணர்ந்த நாம் தொடர்ந்து செயற்பட்டு இதுவரை 124 வழக்குகளைத் தீர்த்துள்ளோம். மேலும் 18 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

மக்களது ஆதரவும் ஒத்துழைப்புமே எம்மைச் செயற்படத் தூண்டின. நேரச்செலவு பணச்செலவைப் பொருட்படுத்தாது சபையை நடத்திவந்தோம். எவரிடமும் எமக்கு எனப் பணம் வசூலித்தது இல்லை; குற்றப்பணம் நன்கொடைப்பணம் என யாழ்ப்பாணத்திலுள்ள சகல பள்ளிவாசல்களுக்கும் பணம்பெற்றுக்கொடுத்தோம்.

இந்நிலையில் நாம்07-02-86ன் பின்பு புதிய வழக்குகளை எடுப்பது இல்லை; ஏற்கனவே உள்ள விசாரணைகள்முடிவுபெற்றதும் சபை கலைக்கப்படும் என அறிவிக்கநேரிட்டது.

அதற்கான காரணம் நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் அல்ல. சில மக்கள்-சபையுடன் நடந்துகொண்ட விதமேயாகும். சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களில் சிலர் தந்த இடஞ்சல்களும் தீர்ப்பளிக்கவந்த உலாமாக்களை அவமதித்ததையும் சமாதான சபையை தகாத வார்த்தைப் பிரயோகங்களினுல் சாடியமையையும் கட்டுப்பாடற்றவர்களாக இயங்கியமையினுலும் நாங்கள் சிலர் ஒன்றுகூடி அமைத்த இச்சபையை தாமே அப்பணியிலிருந்தும் ஒதுங்க விரும்பியதால் கலைக்கும் முடிவிற்கும் தள்ளப்பட்டோம். இத்தீர்மானத்திற்கு வருவதற்கும், கலைக்கப்படவுள்ளதாக அறிவித்தலை வெளியிடுவதற்கும் நாம் உரிமையுடையவர்களே என்பதைப் பணிவாக அறியத்தருகிறேம்.

எமது சபை எமது சமூகத்திலுள்ள பிரச்னைபை வெளியே கையளிக்காது நமக்குள் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றே இயங்கி வந்தது. சில விடங்களில் மார்க்க அறிஞர்களது தீர்ப்பைப்பெற்று அமுல்படுத்தியது. ஆனுல் அண்மைக் காலத்தில் சிலர் கட்டுப்பாடற்று இயங்க நீதி கூறவந்த நடுவர்களை அவமதித்து நாமே தீர்ப்புக் கூறுபவர்களாக செயற்பட்டதைக் காணமுடிந்தது. 07 02-86இல் பெரிய பள்ளிவாசங் ஜும்மாப் பிரசங்கத்தில் எமது சமூகம் எவ்வாறு நீதியை நிலைநாட்ட முயல்கிறது என்பதை கதீபவர்கள் தெளிவாக விளக்கியதையும் மக்கள் அறிவீர்கள்.

எமது சபை மீண்டும் இயங்க வேண்டும் என கையொப்பம் பெற்று எவருமே எம்மிடம் சர்ப்பிச்கவில்லை கையொப்பம் பெற்றவர்களிடமே அது பற்றி விஞவை எழுப்புங்கள் விடையையும் பெறுங்கள்.

யாழ்/முஸ்லிம்
சமாதான சபை

---

3 1ம் நாள்
நினைவஞ்சலி



அமரர் சரவணமுத்து பொன்னுத்துரை
(இளைப்பாறிய தபாலதிபர்)

தோற்றம்: 19-07-1923
மறைவு: 09-03-1986

"உயிருள்ள வரை எமக்காக வாழ்ந்தாய். உதிர்ந்தபின் உன்னை எவ்வாறு மறப்போம்".

எமது தெய்வத்தின் இறுதி கிரியைகளில் பங்கு பற்றி உதவி செய்தோருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் எமது நன்றி.

மனைவி, பிள்ளைகள்.

"இலக்குமிவாசம்"
அளவெட்டி. C 1646

---

1-ம் வருட
நினைவஞ்சலி



திரு. நடராஜா
கருணுநந்தன்

தாயின் அணைப்பில்:
1940-06-24
இறைவன் பிணைப்பில்:
1985-03-20

எங்கள் குடும்பத்தின் தலைவனுய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்புமனைவி கமலா,
பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்,
மைத்துனர்,
மாமன், மாமி.

மணற்தறை வீதி,
கந்தர்மடம்.
(C1615]

---

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கே.டானியலின் 60 அறுபதாவது பிறந்த தினம் இம்மாதம் 15 ம் திகதி வருவதை முன்னிட்டு கலை இலக்கிய நண்பர்கள் அஞ்சலிக்கூட்டமொன்றினை நடாத்தவுள்ளனர்.

தினகரன் பிரதம ஆசிரியர் கே.சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலர் பங்கு பற்றுவார்கள். அமரர் டானியலின் இல்லத்தில் இவ்வஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (ஐ)

## நிர்வாகிகள்

(புலோலி)

கரணவாய்வடக்கு விவசாயிகள் சங்கக் கூட்டம் பயிர்ச் செய்கைஉத்தியோகத்தர் திரு என். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் இடம் பெற்றேர் விபரம்: தலைவர் என்.தம்பிராஜா, உப தலைவர் எம். நடராஜா, செயலாளர் என்.கந்தசாமி, உப செயலாளர் ரீ.அருணுசலம், பொருளாளர் கே. இராசரத்தினம் 7 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் 12 ம், 13 ம் திகதிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்கஅதி திரு.க.சண்முகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் இதற்கான ஒழுங்குகளை விளையாட்டுஅதிகாரி திரு.எஸ். கிருபாமூர்த்தி செய்துள்ளார்.

## வாழ்நாள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'டானியலின் தனிமனிதத் திறமையும், செழுமையும் இல்லாவிட்டால் புதிய மரபுகள் தோன்றி இருக்காது இவரது மரபுகள் பற்றிய ஆய்வு நூல் வெளிவர வேண்டும்'' என்றுர்.

மற்றும் ஆசிரியர் திரு. கே, சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் திரு. வ.க.பாலசிங்கம், திரு.எஸ். கணேசன், ஆசிரியர் மு.வேதாரணியம், தா.வீரசிங்கம், திருராஜ சிறீகாந்தன், சி. இராசேந்திரம் ஆகியோரும் பேசினுர்கள். (ஐ)

## நூலகர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் உள்ள கிராமிய, நகர நூலகர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கொன்றை யூன் மாத முற்பகுதியில் நடாத்துவதற்கு அயோத்தி நூலகச் சேவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் நூலகர்கள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன் ஆனைக்கோட்டையில் உள்ள அயோத்தி நூலக சேவை நிர்வாக இயக்குனருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## இருவார இலவச உணவுப் பொருள்

(பண்டத்தரிப்பு)

பலாலி.மயிலிட்டிஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலையினுல் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பண்டத்தரிப்பு. சில்லாலை ஆகிய இடங்களில் தஞ்சமடைந்திருக்கும் 32 குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கான இலவச உணவுப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலம் வழங்கப்பட்டன.

பண்டத்தரிப்புமக்கள் அவையின் நிவாரணக் குழு தலைவர் சிங்கராயர் இது தொடர்பாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்புகொண்டு விடுத்த வேண்டுகோளை அடுத்து இக் குடும்பங்களுக்கு இலவச உணவுப் பொருள்கள் அண்மையில் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு ஊடாக விநியோகிக்கப்பட்டன.

## க்ஷய வருஷ திருக்கணித பஞ்சாங்கம்

மட்டுவில் சி. சப்பிரமணிய ஐயர் F.R.A S. அவர்களின் மைத்துனர் சி. சிதம்பரநாதக் குருக்களால் கணிக்கப்பட்டு வெளிவரும் க்ஷய வருட திருக்கணித பஞ்சாங்கம் கிடைக்கப் பெற்றேம்

319 வருஷங்களுக்கு முன் வெளிவரத்தொடங்கிய வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித முறைப்படி 175 வருடங்களாக கணிக்கப்பட்டு வெளிவருகின்றது. வான சாஸ்திர வல்லுநர்களால் வெளிப்படையாகக் காணக்கூடிய கிரகங்களின் சஞ்சாரங்களை உறுதிப்படுத்தக் கூடிய தெளிவாக இப்பஞ்சாங்கக் கணிக்கப்படுகிறது. இப்பஞ்சாங்கக் கணிப்பின்படி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 3-12 மணியளவிலேயே க்ஷய வருடம் பிறக்கின்றது.

வருடப் பிறப்பையொட்டி அன்றும் அடுத்த நாளும் மேற்கொளளவேண்டிய கருமங்கள் விரிவாக இப்பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் இஷ்டகுலதேவஆராதனை சூரிய பொங்கல், தானதருமம், குருபெற்றேர் முதலியோர்களை வணங்கல், பிதிர் தர்ப்பணம்என்பனவும் விசேடமாக மேற்கொள்ள வேண்டியன என்று குறிக்கப்பட்டுள்ளது

14ம்திகதி பகல் 10-0¼ மணி முதல் 12-04 மணி வரையான நேரமும் இரவு 12-28 முதல் 1 16 மணி வரையான நேரமும்— 16ந்திசதிபுதன்கிழமை இரவு 6-27 மணிமுதல் 8-03 மணி வரையான நேரமுமகைவிசேடத்திற்குரிய தினப் என இப்பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது.

இத்திருக்கணித பஞ்சாங்கத்தில் 72ம் பக்கத்திலுள்ளமுகூர்த்த விஞ்ஞாபனம், முக்கிய குறிப்பு என்பனவும்— 24ம், 25ம், 26ம், 27ம் பக்கங்களிலுள்ள செவ்வாய் தோசக் குறிப்பு வீட்டுப் பொருத்தம்- குடிபுகலுக்கான கான பொருள்கள் முதலிய குறிப்புக்கள் நம்மவர் ஒவ்வொருவராலும் அறிந்து கடைப்பிடிக்கவேண்டிய சிறப்புடையனவாம். இத்தகைய குறிப்புக்களால் திருக்கணித பஞ்சாங்கத்தின் பயன் அதிகம் என்று.சொல்லலாம்.

தி. பொன்னம்பலவாணர்

## கண்நோய்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பகுதியில் கண்நோய் தீவிரமாக பரவி வருகின்றது. இந்நோயினுல் பீடிக்கப்பட்டார்களில் பலர் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## மரக்கறி விலை இறக்கம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு சந்தையில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் குறைந்துள்ளன. அதிக செலவு செய்துஉற்பத்திசெய்த இந்தமரக்கறிகள்விலைவீழ்ச்சியடைந்திருப்பது தமக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருப்பதாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## படகு மூலம் பிரயாணத்துக்கு அனுமதி!

[யாழ்ப்பாணம]

எழுவைதீவு மக்களின் போக்குவரத்துப் பிரச்னை சம்பந்தமாக எழுவைதீவு பிரஜைகள் குழுத்தலைவர் திரு ப. யே. தேவராசா, அருள்திரு சா. பி. கிருபானந்தன் அடிகள் தலைமையிலான தூதுக்குழு ஒன்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதன் மூலமாக காரைநகர் கடற்படைத் தளபதி திரு ஜயமான்னவை சந்தித்து எடுத்துக் கூறியுள்ளது.

எழுவைதீவு மக்களின் பிரச்னையை மிகுந்தஅக்சறையுடன் கேட்டறிந்த கடற்படைத் தளபதி, எழுவைதீவு இறங்குதுறையிலிருந்து கரம்பொன் கண்ணகி அம்மன் கோவிலடிக்கு மீன்பிடி மோட்டர் படகு மூலம் பிரயாணம் செய்ய அனுமதிவழங்கியதுடன் வழமையான கடற்படை சோதனையும் இடம் பெறும் என்றுர்.

இதனையடுத்து எழுவைதீவிலிருந்து தினமும் இரு காலைச் சேவைகள் கரம்பொன் கண்ணகி அம்மன் கோவிலடிக்கு நடைபெறவுள்ளன.

## மிஃராஜுந்நபி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

(ஸல்) அவர்கள் ஒளியினுல் படைக்கப்பட்ட ஜிப்ரயீல் என்னும் வானவர் தலைவருடன் ஏழுவானங்களையும் கடந்து சென்றுர்கள். ஏழு வானங்களின் ஒவ்வொரு கதவும் திறக்கப்பட்டுச் சோபனம் கூறப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஒரு வானத்தின் முடிவு. மறுவானத்தின் ஆரம்பம் இந்த ஆரப்பத்தைத் தான் கதவு என்று பொது வார்த்தையில் சொல்லப்பட்டுள்ளது.

சந்திரனை அடைந்த மனிதன் கல்லையும் மண்ணையும் கொண்டுவந்தான். அல்லாஹ்வின் சந்நிதானத்தைஅடைந்த பெருமானுர் பரிசாக ஐந்து நேரத் தொழுகைகளைக் கொண்டு வந்தார்கள். இந்தத் தொழுகை, அதனுடைய அந்தஸ்து, அதன் பின்னர் கேட்கப்படும் "துஆ" என்னும் வேண்டுதல் அல்லாஹ்வின் சந்நிதானத்தைஅசைத்து விடும் என்று விபரித்தார்கள்.

மிஃராஜ் பயணம் கண் இமை வெட்டும் நேரத்தில் நடந்து முடிந்ததாகச் சொல்லப்படுகின்றது மனிதசிந்தனை இமை வெட்டும் நேரத்தில்பல கோடி மைல்களுக்கு அப்பாலுள்ள சூரியனுக்கும் போய் திரும்பி வரும்போது பெருமானுர் முஹம்மத்[ஸல்] அவர்கள் விண்வெளி யாத்திரை "மிஃராஜ்" ஏன் இந்நேரத்தில் அமைந்திருக்காது.

அகுமது கரீம் அப்பர்
ஜின்னு,

## மாங்குளம் ராணுவ முகாமிலிருந்து
# லொறியுடன் மூவரும் விடுவிக்கப்பட்டனர்

[வவனியா]

மாங்குளம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். லொறியுடன் அதன் சாரதி, கிளீனர் ஆகியோர் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

சிமெந்து ஏற்றிக் கொண்டு கொழும்பு சென்ற இந்த லொறி கடந்த 1 ம் திகதி பிற்பகல் இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டது.

லொறி ஒன்று இராணுவத்தினருக்குத் தேவைப்பட்டதைத் தொடர்ந்து இந்த லொறி அங்கு மறித்து வைக்கப்பட்டதாகத் தெரியவந்திருக்கிறது.

இந்த லொறியில் பயணம் செய்த வவனியா வர்த்தகர் திரு. சண்முகராஜாவும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## "ஜோண்பிளேயர்" கிண்ணம்
# முக்கோணப் போட்டியில் பாகிஸ்தான் சாம்பியன்

(கொழும்பு)

"ஜோண்பிளேயர்" வெற்றிக் கிண்ண முக்கோணப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று, வெற்றிக் கிண்ணத்தை தம்வசப்படுத்திக் கொண்டது.

நேற்று பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகள் மோதிக் கொண்டன முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்துக் கோஷ்டி 42 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 214 ஓட்டங்களைப் பெற்றது மாட்டின் குரோ 75 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் கோஷ்டி 41 ஓவர்களில் 6 விக்செட்டுகள் நஷ்டத்துக்கு 217 ஓட்டங்களைப் பெற்றது காப்டன் ஜவில் மியாண்டாட் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்படி முக்கோணப் போட்டியில் இலங்கை, பாகிஸ்தான், நியூஸிலாந்து ஆகிய கோஷ்டிகள் பங்குபற்றின.

நியூஸிலாந்து - இலங்கைக் கோஷ்டி போட்டியில் நியூஸிலாந்து வெற்றி பெற்றது இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசை நியூஸிலாந்து வீரர் மாட்டீன் இட லென் பெற்றார்.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் போட்டியில், சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசை நியூஸிலாந்து வீரர் மாட்டீன் குரோ பெற்றார்.

மேற்படிச் சுற்றுப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக, பாகிஸ்தான் கோஷ்டியின் வீரர் ஜவில் மியண்டாட் தெரிவு செய்யப்பட்டார். (வி)

## "இலங்கையில்
# தமிழர் போராட்டத்தை முடுக்கிவிட்டவர் 'செல்வா'

[சென்னை]

இலங்கைத் தமிழரின் இலட்சியங்களுக்கும் அபிலாஷைகளுக்குமாக 'ஈழத்துக்காந்தி' யெனவும், 'தமிழர் தந்தை' யெனவும் ஏற்றிப் போற்றப்பட்ட திரு. எஸ் ஜே. வி செல்வநாயகத்தின் 88-வது பிறந்த தினத்தையொட்டித் தமிழ் நாட்டில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் அவருக்குப் புகழாரஞ் சூட்டும் சொற்பொழிவுகள் பல இடம்பெற்றன.

தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் திரு கே. ராஜாராம் பேசுகையில் 'இலங்கைத் தமிழர்களைத் தமது உரிமைகளுக்காகப் போராட முதன் முதலில் முடுக்கிவிட்டவர் தந்தை 'செல்வா'வே' எனக் குறிப்பிட்டார்.

திரு செல்வநாயகத்தின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தமிழ்நாடு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன், "இலங்கையில் தமிழர் தற்சமயம் நடத்துகின்ற போராட்டம் வெற்றியையே தரும்" என நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம், த.வி. கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், த.வி கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு எஸ். ஸி. சந்திரகாசன் ஆகியோரும் உரையாற்றினர். [ஷ]

## கலகலப்பு!

[வவனியா]

கடந்த சில தினங்களாக வவனியா நகரம் கலகலப்பாகக் காட்சிதருகின்றது.

காலையில் சனக் கூட்டத்தினைக் காணமுடிகின்றது. பின்னர் படிப்படியாகச் சன நடமாட்டம் குறைந்து பிற்பகலானதும் மயான அமைதி நிலவுகிறது புத்தாண்டு தினம் நெருங்கும் இவ்வேளையில் நகருக்கு வரும் மக்களுடைய தொகை அதிகரித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, பல பகுதிகளிலிருந்தும் நகருக்கு நெல்மூடைகள் வந்தவண்ணமுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## கடத்தப்பட்டகார் மீண்டது

(புலோலி)

இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர் கோஷ்டியொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட பருத்தித்துறை வர்த்தகர் திரு. சிவாமலிங்கத்தின் கார் மீண்டும் கிடைத்துள்ளது.

# ஆலோசனைக் குழுமுன் 35 சிங்கள இளைஞர்

[கொழும்பு]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 48 பேர், கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனைக் குழு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கமைய இந்தஆலோசனைக்குழு நியமிககப்பட்டது தெரிந்ததே.

கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்னர் நியமிக்கப்பட்ட இந்த ஆலோசனைக்குழு முன்னிலையில் பல இளைஞர்கள் ஆஜர்செய்யப்பட்ட பின்னர், அவ்விளைஞர்களை விடுவிக்கும்படி ஆலோசனைக் குழு சிபார்சு செய்திருந்தும் இதுவரை எவரும் விடுவிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது. இதனால் சட்டத்தரணிகள் பத்தியில் இக்குழுமீது அதிருப்தியும் கவலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனைக் குழு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட 48 இளைஞர்களுள் 35 சிங்களவர்களும் 13 தமிழர்களும் அடங்குவர். [இ-மா]

## இன்று கலந்துரையாடல்

[புலோலி]

விவசாயிகள் பொதுக் கூட்டமும் கலந்துரையாடல் ஒன்றும் இன்று செவ்வாய்கிழமை புலோலி மேற்கு நாவலர் சனசமூக நிலைமண்டபத்தில் நிலையத்தலைவர் திரு தி விஜயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## நாளை பார்சுவ சூரியகிரகணம்!

[யாழ்ப்பாணம்]

நாளை இடம்பெறும் பார்சுவ சூரியகிரகணம் இலங்கையில் தென்படாது ஆனாலும் இது புத்தாண்டு பிறப்பதற்குஐந்துநாட்களுக்கு முன் இடம்பெறுவது நாட்டுக்கு நல்லதல்ல என்பது சாஸ்திர விதி. இம்மாதம் 28-ந் திகதி சந்திரகிரகணம் ஏற்படும். [கெ]

## கசிப்பு பரல் பிடிபட்டன

[வண்ணார்பண்ணை]

கோண்டாவில் உரும்பராய் பகுதிகளில் கசிப்பு வேட்டையில்ஈடுபட்ட இளைஞர்கோஷ்டியினர் சுமார் 400 கசிப்புபரல்களை லொறியில் ஏற்றிச் சென்றனர் கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கசிப்புக் காச்சும் இடங்களுக்கும். கசிப்பு விற்கும் இடங்களுக்கும் சென்று எச்சரிக்கை விடுத்துள்ள இவர்கள் தமது திடீர் விஜயத்தின்போது பல இடங்களிலும் 400 பரல் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிர்க்கொல்லியான கசிப்பை உற்பத்திசெய்வது தமிழ் மக்களை அழிக்கும் செயல்களில் ஒன்றாகக் கருதப்படவேண்டும் என்று இந்த உற்பத்திகளில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

## பூநகரியில் பலர்கைதாகி விடுதலை

(பூநகரி)

பூநகரியில் வாடியடியில்அலுவலாகவந்தோர் பலர்கைதாகி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணையின் பின் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதன்காரணமாகப் பூநகரி வாடியடியில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கின்றது.

முகாமின்மேடையிலேநின்று இராணுவத்தினர் நாலாபக்கமும் கண்காணிக்கின்றனர். முகாமிலிருந்து நூறுயார்எல்லைக்குள் வாடியடிச் சந்தை, வர்த்தகநிலையங்கள், யாழ் அபிவிருத்திச் சபை உப அலுவலகம், பெற்றோல் நிலையம், அரிசி ஆலைகள், பஸ்நிலையம், ஆயுள்வேதவைத்திய சாலை போன்ற பல பொது ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்பதும் இதனால்பூநகரிப்பொது மக்கள் அத்தியாவசியதேவைகளுக்காக வாடியடி வரவேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது;

## 'ஏடின்' வைத்திலிங்கம் காலமானார்

[யாழ்ப்பாணம்]

காரைநகரைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், இலங்கையின் மறுமலர்ச்சிக்கால முற்போக்களர்களில் ஒருவருமான 'ஏடன்' வைத்திலிங்கம் என அழைக்கப்படும் திரு முருகேசு வைத்திலிங்கம் காலமானார்.

திரு. வைத்திலிங்கம் சேர் பொன். இராமநாதனின் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதி நூலாககி வெளியிட்ட சேவை குறிப்பிடத்தக்கது

அன்னாரது இறுதிக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நேற்று நடைபெற்றன.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

# மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தம்பிஐயா

கந்தரோடையைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் சின்னத்தம்பி தம்பிஐயா [மலாயன் பென்சனியர்] 7-4-1986 அன்று காலமானார். அன்னாரின் ஈமககிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

[C 1656] தகவல்:- திருமதி தம்பிஐயா.

### சின்னத்தம்பி வயிரமுத்து



சங்கானை முன்னாள் பட்டின சபைத் தலைவரும், சங்கானை மதுபானநிலையஉரிமையாளருமாகிய சின்னத்தம்பி வயிரமுத்து 7-4-86ல் காலமானார். அன்னார்செல்லம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பூரணி, திலகவதி, மஞ்சுளாவதி, கிருஷ்ணதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம் (N T. இராசரத்தினம் and Bros, சங்கானை) மதிபூஷணன் (சிறில்ஸ் பார்மஸி, யாழ்ப்பாணம்), திரவியம் (அபிவிருத்திச் சபை, மன்னார்) ஆகியோரின் மாமனாரும், தர்மினி பாஸ்கரன், கிருபாகரன், சுரேஷ், பிரபாகரன், அரிகரன், நிமல்ராஜ், நிமல்ராஜி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் ஈமக் கிரியைகள் சங்கானை, குளத்தடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (8-4-86) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: N. T. இராசரத்தினம்,
[C 1655] மாக்கற், சங்கானை.

### கந்தையா பரமசிவம்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கந்தையா பரமசிவம் (கிறிண்டிகல எஸ்டேட் சுப்பிரின்டன்) சிவபதமடைந்துவிட்டார். அன்னார் நவரத்தினராசாத்தியின் அன்புக் கணவரும், யாழ் பரியோவான் கல்லூரி மாணவர்களான ராகுலன் (12 ம் ஆண்டு), ராகவன் (10-ம் ஆண்டு), ரவிந்தன் (9-ம் ஆண்டு) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, சேளி, பரம்சோதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புத்தூர் மேற்கு இளைப்பாறிய விதானையார் திரு சங்கரப்பிள்ளை J P. அவர்களின் அருமை மருமகனும், நவரத்தினவேல் (பொறியியலாளர், தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்), நவரத்தினராஜவேல் (ஆசிரியர், சோமஸ்கந்தா கல்லூரி), காலஞ்சென்ற நாகரத்தினம் (C. T B பிரதேச முகாமையாளர்), காலஞ்சென்ற விவேகானந்தன் (தபால் அதிபர்), பரம்சோதி (டாக்டர், நியூஸி), ஆச்சிப்பிள்ளை (வசாவிளான்), நவரத்தினமணி (புத்தூர்), நவராணி (புத்தூர்) ஆகியோரின் மைத்துனரும், நடராசா குகனேஸ்வரன் (மாலைதீவு), காலஞ்சென்ற ஸ்ரீராமசந்திரன் (புத்தூர்), டாக்டர் திருமதி யோகாம்பிகை நவரத்தினவேல் M B B. S. (அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), திருமதி கங்காதேவி நவரத்தினராஜவேல் (புலோலி) ஆகியோர்களினதும் சகலனும் ஆவர். அன்னாரது இறுதி ஈமக்கிரியைகள் புத்தூரில் அன்னாரது இல்லத்தில் இன்று (8-4-86) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. சங்கரப்பிள்ளை J. P.,
இளைப்பாறிய விதானையார்,
புத்தூர். [C1642]